சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் – 2015–2016–ஆம் ஆண்டில் திட்டத்தினை செயல்படுத்துவது – சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டுவது – நிதி ஒப்பளிப்பு மற்றும் விடுவிப்பு செய்வது – வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்பளித்தல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–1)த் துறை

அரசாணை(நிலை) எண்.64 நாள் 24.4. 2015

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 17.08.2011.
2. அரசாணை (நிலை) எண்.47, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 15.06.2012.
3. அரசாணை (நிலை) எண்.98, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 31.07.2013.
4. அரசாணை (நிலை) எண் 74,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 25.6.2014
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.9775/2014/RHS 1-1, நாள் 6.4.2015

----

ஆணை:

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் 2011–2012 முதல் 2015–2016–ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு 60,000 வீடுகள் வீதம் 3 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கும் மற்றும் திட்டத்தினை செயல்படுத்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இதனையடுத்து இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015ஆம் ஆண்டுகளில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தினை செயல்படுத்திட ஆணைகள் வெளியிடப்பட்டன.

2) 2015–2016–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் இன்னபிறவற்றிற்கிடையே, முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ்

**60,000** வீடுகள் கட்டுவதற்கு **2015–2016–**ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.**1,260** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என அறிவிப்பு செய்தார்கள்.

**3)** மேற்காணும் அறிவிப்பினை தொடர்ந்து மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் கருத்துரு மற்றும் வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை அரசின் ஒப்புதலுக்காகவும் மற்றும் தேவையான ஆணைகளை வெளியிடுவதற்காகவும் அனுப்பியுள்ளார்.

**4)** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து அதனை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து, அதன்படி, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(a) **2015–2016–**ஆம் ஆண்டில், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் **60,000** வீடுகள் ரூ.**2.10** இலட்சம் அலகுத் தொகையில் கட்டப்படும். அதில் ரூ.**1.80** இலட்சம் கட்டுமானத்திற்காகவும் மற்றும் எஞ்சிய ரூ.**30,000** தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் சூரிய சக்தியுடன் கூடிய விளக்குகள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

(b) 2015-16 ஆம் ஆண்டில் ரூ.**2.10** இலட்சம் அலகுத் தொகையில் **60,000** சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டுவதற்கு ரூ.**1,260** கோடி (ரூபாய் ஆயிரத்து இருநூற்று அறுபது கோடி மட்டும்) நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(c) மேற்குறிப்பிட்ட நிர்வாக ஒப்பளிப்பில் **20%** தொகையான ரூ.**252.00** கோடி (ரூபாய் இருநூற்று ஐம்பத்து இரண்டு கோடி) முதற்கட்டமாக விடுவிக்கப்படுகிறது.

(d) **2015–2016–**ஆம் ஆண்டு முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமைவீடு திட்டத்தினை செயல்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**5.** மேலே பத்தி **4(c)–**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

**2216** வீட்டு வசதி – **03** ஊரக வீட்டு வசதி – **789** ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JD – சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் – **09** உதவித்தொகை – **02** மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கான உதவித்தொகை
(துதொகு **2216 03 789** JD **0928**) ரூ.**73,08,00,000/–**

**2216** –வீட்டு வசதி – **03** ஊரக வீட்டு வசதி – **796** பழங்குடியினர் பகுதித் துணை திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JC – சூரிய

மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்–09 உதவித்தொகை – 02 மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கான உதவித்தொகை
(குதொகு 2216 03 796 JC 0925) ரூ.2,52,00,000/–

2216 வீட்டு வசதி – 03 – ஊரக வீட்டு வசதி – 800 ஏனைய செலவு – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JG – சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம். – 09 உதவித்தொகை–02 மூலதனச்சொத்துக்களை உருவாக்குவதற்கான உதவித்தொகை
(குதொகு 2216 03 800 JG 0926) ரூ.176,40,00,000/–

மொத்தம் ரூ.252,00,00,000/–

6) மேலே பத்தி 4 (c)–ல் விடுவிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7) இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண். 23815/(FIN(RD)/2015, நாள் 23.4.2015–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
அரசு செயலாளர், எரிசக்தித் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
முதன்மை கணக்கு அலுவலர், சென்னை–9/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
தேசிய தகவல் மையம், சென்னை–9.
<u>நகல்</u>
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ஊ.வ (ம) ஊ/பட்டியல்–I/ பட்டியல்–II) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**அரசாணை (நிலை) எண். 64 , ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை நாள்.24.4.2015**

**இணைப்பு**

**முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்–2015–16**

முன்னுரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 03.06.2011 அன்று மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ''இந்த அரசு கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில் 'சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்' தொடங்கி, 300 சதுர அடி அளவில் ரூ. 1.80 இலட்சம் அலகுத்தொகையில் முழு செலவினையும் மாநில அரசே ஏற்று வீடுகளை கட்டிக் கொடுக்கும்'' என அறிவிக்கப்பட்டது. ஊரகப்பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழைகளுக்கு சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு வழங்குவதே முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

அதன்படி, ஒவ்வொரு வீடும் ரூ. 1.80 இலட்சம் அலகுத் தொகையில் 300 சதுர அடி பரப்பளவில் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளை ஆண்டு ஒன்றுக்கு 60,000 வீடுகள் என்ற அடிப்படையில், 2011–12–ல் தொடங்கி, அடுத்து வரும் 5 ஆண்டுகளில் இவ்வீடுகளைக் கட்டுவது என அரசு ஆணையிட்டுள்ளது. கடந்த 2011-12 முதல் 2014-15 ஆம் ஆண்டு வரை 2,40,000 வீடுகள் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளன. 09.04.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன் கீழ் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீட்டிற்கான அலகுத் தொகையினை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ. 2.10 இலட்சமாக 2013–14 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படும் எனவும், இதில் ரூ. 1.80 லட்சம் வீடுகள் கட்டுவதற்கும், ரூ. 30,000/- சூரிய சக்தி விளக்குகள் அமைக்கவும் வழங்கப்படும் எனவும் அறிவிப்பு செய்தார்கள்.

**2. இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்:**

(i) ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் அனைவரும் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் பெற தகுதியானவர்கள்.

(ii) ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ. 2.10 லட்சம் அலகுத் தொகையில் மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படுகிறது.

(iii) ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை தாழ்வாரம் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

(iv) ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் 5 அடர்குறு விளக்குகள் அமைக்கப்படும். இவை படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் தலா ஒரு விளக்கு வீதம் அமைக்கப்படும். பயனாளிகளின் விருப்பத்தின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மீட்டர் அளவீடுடன் கூடிய மின் இணைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(v) ஒரு வீட்டிற்கான அலகுத் தொகையான ரூ. 2.10 லட்சத்தில், ரூ.1.80 லட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.30,000/– சூரிய சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் ஒதுக்கப்படுவதுடன் 4% தொகை சேவைக்கட்டணமாக சூரிய சக்தி விளக்குகள் அமைப்பதற்கு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு (TEDA) வழங்கப்படும்.

(vi) வீடுகள் கட்டும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலமாக செயல்படுத்தப்படும்.

(vii) பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் (அவன்/அவள் தற்போது வசிக்கும் கட்டடத்தை அகற்றிவிட்டு) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்கு சொந்தமான இடங்களில் கட்டித்தரப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கென நில எடுப்புகள் ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப்பட்டா உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியானவர்கள் ஆவர்.

(viii) சூரிய ஒளி முகப்புப் பலகை மற்றும் விளக்குகள் வாங்குதல், வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றை அனுமதிக்கப்பட்ட வழிமுறைகளின்படி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.

**3. மாதிரி வடிவமைப்பு மற்றும் அலகுத்தொகை:–**

i. ஒவ்வொரு பசுமை வீடும் அதிகபட்சம் 300 சதுர அடி பரப்பளவில் ரூ. 2.10 இலட்சம் அலகுத் தொகையில் கட்டப்படும். மேலும், அரசு ஆணை (நிலை) எண். 59, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–1)த் துறை நாள். 15.04.2015–ன்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக

வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து ஒரு பயனாளிக்கு தினக்கூலி அடிப்படையில் 90 மனித நாட்களுக்கான ஊதியம் ரூ.16,470/– (2015–16 ஆம் ஆண்டிற்கு) அளிக்கப்பட வேண்டும். இந்த வீடுகளில், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையலறை, கழிப்பறை ஆகியவை கட்டப்படும். மேலும், தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) (SBM(G)) / மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து கழிப்பறை கட்ட ரூ.12,000/– வழங்கப்பட வேண்டும். அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படும். வீடுகளில் சூரிய சக்தி விளக்குகள் பொருத்தும் பணி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படும்.

ii. ஒவ்வொரு பசுமை வீடும் அனுமதிக்கப்பட்ட பரப்பளவான 300 சதுர அடிக்கு மிகாமல் இருக்கும் வகையில் இதற்கென தனியாக மாதிரி வடிவமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரே மாதிரியான வடிவமைப்பில் கட்டவேண்டும் என்பதால் வடிவமைப்பில் மாறுதல்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

iii. இருப்பினும், அனுமதிக்கப்பட்ட வீட்டின் பரப்பளவான 300 சதுர அடியில் வீட்டின் வடிவமைப்பில் மாறுதல் செய்யாமல் சமையலறை மற்றும் படுக்கை அறை போன்றவற்றை இட அமைவிற்கேற்ப மாற்றி அமைக்க அனுமதிக்கப்படும்.

iv. இத்திட்டத்திற்கென செராமிக் ஓடுகளில் வடிவமைக்கப்பட்ட சின்னத்தை அனைத்து வீடுகளிலும் வடிவமைப்பில் உள்ளவாறு அனைவரும் பார்க்கும் வகையில், கடந்த ஆண்டில் அமைத்தவாறு பதிக்கப்பட வேண்டும்.

v. இத்திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிலும் , திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் வீடு கட்டப்பட்ட ஆண்டு ஆகிய விபரங்கள் தெளிவாக தெரியும் வகையில் வண்ணத்தினால் எழுதப்படவேண்டும்.

**4. சூரிய சக்தி விளக்குகள் அமைத்தல்:–**

சூரிய சக்தி விளக்குகள் அமைக்கவும், செயல்படுத்தவும் மற்றும் பராமரிக்கவும் கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

ஒளி உமிழும் இரு முனைய (LED) விளக்குகள் 30,000 வீடுகளுக்கு மிகாமல் கீழ்க்கண்ட வடிவமைப்பின்படி அமைக்கப்படும்.

(i)தலா 5 ஒளி உமிழும் இரு முனைய விளக்குகள் (LED) ஒரு நாளைக்கு 5 மணி நேரம் எரியும் வகையில் அமைக்கப்படும். (7 வாட் திறன் கொண்ட இரண்டு ஒளி உமிழும் இரு முனைய

விளக்குகள் (LED) வசிக்கும் அறை மற்றும் தாழ்வாரம் ஆகியவற்றில் அமைக்கப்படும். 5 வாட் திறன் கொண்ட தலா இரண்டு ஒளி உமிழும் இரு முனைய விளக்குகள் (LED) சமையல் அறை மற்றும் படுக்கை அறையிலும் அமைக்கப்படும் மற்றும் 3 வாட் திறன் கொண்ட இருமுனை விளக்கு (LED) ஒன்று கழிவறையில்அமைக்கப்படும்). மீதமுள்ள வீடுகளுக்கு 2011–12–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதைப் போல் 9 வாட் திறன்கொண்ட 5 அடர்குறு விளக்குகள்(CFL) அமைக்கப்படும்.

(ii) சூரிய சக்தி விளக்குகளுக்கான உட்புற ஒயரிங் செய்யும் பணி தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி மேம்பாட்டு முகமை மேற்கொள்ளும். கட்டுமானப்பணி முழுதும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும். சூரிய சக்தி மின்விளக்குகள் பொருத்தும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி மேம்பாட்டு முகமை மேற்கொள்ளும்.

(iii)விரிவான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்த காலத்தை உள்ளடக்கிய ஐந்து ஆண்டு உத்திரவாதமுள்ள பொருட்களை வழங்க அளிக்கும் உத்தரவாதம் விலைப்புள்ளியிலேயே சேர்க்கப்படவேண்டும். சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் நிறுவனங்கள் வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் பராமரிப்பு மையங்களை அமைத்திட வேண்டும். மேலும், மாவட்ட அளவில் சிறப்பு தொலைபேசி இணைப்பு (Help line) ஒன்று விநியோகிஸ்தர் / தயாரிப்பாளரால் அமைக்கப்படவேண்டும். அவசர நிலையின் போது அழைக்கும் வண்ணம் பயனாளிக்கு இந்த தொடர்பு எண் / முகவரி தெரியப்படுத்தப்பட வேண்டும்.

(iv) ஒரு வீட்டிற்கு சூரிய சக்தி விளக்குகள் அமைப்பதற்கு தேவையான தொகையான ரூ.30,000/–ஐ சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பெற்று தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் கணக்கில் செலுத்த வேண்டும். இதற்குரிய தகுதியான மானியத்தொகையினை மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட எரிசக்தி அமைச்சகத்தில் இருந்து தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பெற்று தமிழ்நாடு அரசுக்கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

(v) இத்திட்டத்தினை செயல்படுத்தும்போது பெறப்படும் வட்டி மற்றும் இதர சேமிப்புத்தொகை ஏதேனும் இருப்பின் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அதனை தமிழ்நாடு அரசுக் கணக்கில் செலுத்திட வேண்டும்.

(vi)1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளி மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அதன் விதிகள் 2000–ன் படி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் இதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.

(i) சூரிய சக்தி விளக்குகள் அமைத்துப் பராமரிப்பது மற்றும் பயன்படுத்துவது தொடர்பான சிற்றேடு/துண்டு பிரசுரம் மற்றும் இதர பயிற்சி கையேடுகள் வெளியிடத் தக்க தேவையான நடவடிக்கைகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் எடுக்கப்பட வேண்டும். மேலும் 'செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை' குறித்த கையேடு ஒன்றையும் தமிழில் தயாரித்து பயனாளிக்கு வழங்கிட வேண்டும்.

(ii) விநியோகிஸ்தர்களுக்கும், பயனாளிகளுக்கும் இடையே சரியான புரிந்துணர்வை ஏற்படுத்த கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள், தேர்வு செய்யப்பட்ட சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் தகுதியானவர்கள் என கருதப்படும் உள்ளூர் பிரதிநிதிகள் ஆகியவர்களுக்கு உரிய பயிற்சியளிக்கத் தேவையான பயிற்சித் தொகுப்புகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் தயாரிக்கப்பட வேண்டும்.

**5. பணிகளை செயல்படுத்துதல்**:

சூரிய சக்தி விளக்குகளை அமைத்து செயல்படுத்தும் நிறுவனங்கள் விரிவான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தை உள்ளடக்கிய **5** ஆண்டு உத்திரவாதத்திற்கு பொறுப்பானவர்கள். திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் ஒருங்கிணைந்து செயல்படவும், கண்காணிக்கவும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, ஒரு உதவி செயற்பொறியாளர்/உதவி பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்-கணினி இயக்குநர் நிலையில் ஒருவரையும் ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணியமர்த்த வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பணியாளர்கள் பணியாற்ற தனி அறை ஒன்றை திட்ட இயக்குநர் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**i)** தரக்கட்டுபாடு மற்றும் ஆய்வு

திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் மற்றும் ஆய்வு மேற்கொள்ள நிர்ணயிக்கப்படும் மூன்றாம் தரப்பு நிறுவனங்கள் ஆகியவற்றினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை முடிவு செய்யும். வாங்கப்படும் பொருட்களின் தரம் மற்றும் முடிக்கப்பட்ட வேலைகளின் தன்மை, அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ள விவரக் குறியீட்டின்படி உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டியது இந்நிறுவனங்களின் பொறுப்பாகும். பொருட்கள் அனுப்பும் முன்பே அவைகளை விநியோகஸ்தர்களின் இடத்தில் வைத்து தரத்தினை ஆய்வு செய்வதும் இந்த நிறுவனங்களின் பொறுப்பில் அடங்கும்.

சூரிய சக்தி விளக்குகள் அமைக்கப்பட்ட பின்னர் இப்பணியினை திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் 100 சதவீதம் ஆய்வு மேற்கொண்டு வேலை நடைபெற்றதை உறுதி செய்ய வேண்டும். அமைக்கப்பட்ட சூரிய சக்தி விளக்குகள் மற்றும் அமைப்புகளில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதனை உடனடியாக பழுது நீக்கம் செய்யும் பொருட்டு தொடர்புடைய பயனாளி, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தினால் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

அமைக்கப்பட்ட விளக்குகளில் / அமைப்பில் ஏதேனும் குறைபாடுகள் / திருப்தியின்மை போன்றவை தர ஆய்வின் போது கண்டறியப்பட்டால் தொடர்புடைய ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் பழுதான பொருளை மாற்றித் தருவதையும் அல்லது சரியாக செய்யப்படாத வேலையை சரி செய்வதையும் செயல்படுத்திடும் நிறுவனமான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை உறுதி செய்யும். அனைத்து பணிகளுமே நிறைவாக இல்லையெனில் அவ்வினங்களில் பழுது நீக்கம் செய்தபின் ஒப்பந்ததாரரிடமிருந்து பழுது நீக்கம் செய்யப்பட்டதென அறிக்கை பெற்ற பின்னரும் அப்பணி மறு ஆய்வு செய்யப்படலாம். பழுது நீக்கம் செய்த பின் பணி நிறைவாக முடிக்கப்பட்டுள்ளதென அறிக்கை வரப்பெற்றால் மட்டுமே தொடர்புடைய நிறுவனங்களுக்கு நிதி விடுவிக்கப்பட வேண்டும். மேற்படி பணிகளைக் கண்காணிப்பதற்காக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை தகுதியான உயர் அலுவலர் ஒருவரை நியமிக்கும்.

**ii) சூரிய சக்தி அமைப்புகளை பராமரித்தல்**

ஒப்பந்தப்புள்ளியின் ஒரு கூறாக ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள பயனாளிகள் மற்றும் 4 சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு, அமைக்கப்பட்ட விளக்குகள் மற்றும் சூரிய சக்தி அமைப்புகளை அன்றாடம் பராமரிப்பு செய்யும் வகையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் முழு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

**iii) அதிகாரமளிக்கப்பட்ட மாநில குழு**

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளரின் தலைமையில் அதிகாரமளிக்கப்பட்ட மாநில குழு ஒன்று கீழ்காணும் உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீடு உட்பட திட்டத்திற்கு அனுமதி அளித்தல், திட்ட செயல்பாட்டினை கண்காணிப்பது மற்றும் சீராய்வு செய்தல் மற்றும் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திடத் தேவையான வழிகாட்டு

நெறிமுறைகளை அவ்வப்போது வகுத்தளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

1. தலைவர்/ நிர்வாக இயக்குநர்,
   தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை-உறுப்பினர்–செயலர்
2. அரசு செயலாளர், எரிசக்தி துறை
3. அரசு செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
4. அரசு செயலாளர், நிதித்துறை
5. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்
6. பெருந்தலைவர் TANTRANSCO
7. Dr. கிரிதர், Centre for Wind Energy Technology
8. பேராசிரியர் அசோக் ஜுன்ஜுன்வாலா, தலைவர், RTBI, IIT சென்னை.

**iv) நிதி விடுவித்தல் மற்றும் அரசு மானியம் கோருதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்திட்டத்திற்கான நிதியை அரசிடமிருந்து பெற்று தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு விடுவிப்பார். ஒப்பந்த நிறுவனங்களுக்கு அவைகளின் பணியின் முன்னேற்றத்திற்கு ஏற்ப நிதி விடுவிக்கப்படும். பணிகள் நிறைவாக முடிக்கப்பட்டுள்ளதென தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் அதிகாரம்பெற்ற அலுவலர் மூலம் உரிய சான்றிதழ் கிடைக்கப்பெற்றவுடன் ஒப்பந்த நிறுவனங்களுக்கு இறுதித் தொகை வழங்கப்படும். மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திடமிருந்து மானியத் தொகையினைப் பெற்று தமிழ்நாடு அரசிற்கு மீள செலுத்துவதற்கான நடவடிக்கையினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மேற்கொள்ளும்.

(v) **உத்தரவாதம்**

மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தினால் அனுமதி அளிக்கப்பட்ட தரத்திற்கான மற்றும் நிபந்தனைகளை நிறைவு செய்வதை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை உறுதிப்படுத்த வேண்டும். சூரிய சக்தி பலகை, மின்கலம், இதர தொடர்புடைய பிற உபகரணங்களுக்கான உத்தரவாதம் ஆகியவை ஒப்பந்தத்தில் இடம்பெற வேண்டும். சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகளுக்கு குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். 2 ஆண்டுகளில் உத்தரவாதம் முடிவுற்ற பின்னர் கூடுதலாக 3 ஆண்டுகளுக்கு முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (CAMC) ஒப்பந்தப்புள்ளி முறையில் இறுதி

செய்யப்படும். முழுமையான வருடாந்திர பராமரிப்பு எத்தனை வருடங்களுக்கு நிர்ணயம் செய்வது என்பதை (CAMC) ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்படும் தொகை மற்றும் நிதி நிலையின் அடிப்படையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை இறுதி முடிவு செய்யும்.

**vi) பயிற்சிக்கான உபகரணங்கள்**

சூரிய சக்தி விளக்குகளின் உபகரணங்களை பயன்படுத்துவது மற்றும் பராமரிப்பது தொடர்பான பயிற்சி கையேடுகள், சிற்றேடுகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் இதர பயிற்சி உபகரணங்கள் ஆகியவற்றினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் தயாரித்து வெளியிடவேண்டும். மேலும், 'செய்ய வேண்டியவை மற்றும் செய்ய கூடாதவை' குறித்த கையேடுகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் தயார் செய்து பயனாளிகள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும்.

**vii) மாவட்ட நிர்வாகத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வசதி செய்தல்**

i) தெரிவு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளின் விபரங்கள் மற்றும் சூரிய சக்தி விளக்குகள் அமைக்க உள்ள வீடுகளின் விவரங்கள் போன்றவற்றை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு முன் கூட்டியே அனுப்பிட வேண்டும்.

ii) சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியில், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மாவட்ட மேலாளர் மூலமாக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் பணி அமர்த்தப்பட்ட திட்ட மேலாண்மை ஆலோசகர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

iii) தேவையான நேரத்தில் எளிதில் தொடர்பு கொள்வதற்கு வழிவகை செய்ய தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையானது சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள் / விநியோகஸ்தர்கள் / ஒப்பந்ததாரர்கள் (AMC holders) பற்றிய முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் அடங்கிய விவரங்களை மாவட்டம், வட்டாரம், ஊராட்சி ஒன்றியம், மற்றும் ஊராட்சிகள் அளவில் வழங்கிட வேண்டும்.\

**viii) முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (CAMC)**

சூரிய சக்தி விளக்குகள் அமைக்க உள்ள நிறுவனங்கள் / விநியோகஸ்தர்கள் / ஒப்பந்ததாரர்களுடன் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து கொள்ளும் உத்தரவாதம் மற்றும் முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் தொடர்பான தகவல்களை சூரிய சக்தி

விளக்குகள் மற்றும் அமைப்புகளை வெற்றிகரமாக நிறுவிய பின்னர் பயனாளிகளுக்கு வழங்க வேண்டும்.

**6. பயனாளிகளின் தகுதிகள்:–**

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

i. சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

ii. சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

iii. 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.

iv. குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப்பட்டா இருக்க வேண்டு«.

v. தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.

vi. அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.

vii.

**7. பயனாளிகளை தேர்வு செய்யும் முறை:-**

i. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோரின் நிரந்தர காத்திருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதில் மிகவும் வறிய நிலையில் உள்ளோர் தேர்வு செய்யப்பட வேண்டும்.

ii. மொத்தம் 60,000 வீடுகளில் 29 விழுக்காடு அதாவது 17,400 வீடுகள், ஆதி திராவிடர்களுக்கும், 1 விழுக்காடு அதாவது 600 வீடுகள், பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள 70 விழுக்காடு அதாவது 42,000 வீடுகள் இதர இனங்களில் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

iii. மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்று திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

iv. பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊரகப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட

குழந்தைகளை கொண்ட குடும்பங்கள்(ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்டவர்கள்), திருநங்கைகள், துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்ட ஹெச்ஐவி/காசநோய்/எய்ட்ஸ் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், வெள்ளம், தீ விபத்து போன்ற இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

v. தகுதியுள்ள ஏழை ஒருவரின் பெயர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் பட்டியலில் விடுபட்டிருப்பின், விடுபட்ட நபர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர், அதன் உண்மைத் தன்மையினை சரிபார்த்து மாவட்ட ஆட்சியரின் இசைவுடன் அவரது பெயரை பட்டியலில் இடம்பெற செய்து அதனை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறவேண்டும். அவ்வாறு பெயர் சேர்க்கப்படும் நிகழ்வில் அவரது பெயரானது நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் ஒரு பகுதியாக்கப்பட்டு பயனாளி தேர்வுக்கு கருத்தில் கொள்ளப்படும்.

vi. கிராம ஊராட்சிகள் தகுதியுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பயனாளிகளின் பட்டியலை தயார் செய்து கிராம சபையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட வேண்டும்.

**8. பயனாளிகள் தேர்வு:–**

வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர் ஆகியோர் அடங்கிய குழு வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள தகுதிவாய்ந்த பயனாளிகளை வழிகாட்டி நெறிமுறைகளின் படி தேர்வு செய்து, அவ்வாறு குழுவால் இறுதி செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை கிராம சபைக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெற வேண்டும். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் கிராம அளவிலான குழுவில் சிறப்பு அழைப்பாளராக இருப்பார்.

**9. வீடுகள் ஒதுக்கீடு செய்தல்:–**

i) மாநில அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் கட்டப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கையை மாவட்ட வாரியக ஒதுக்கீடு செய்வார்.

ii) மாவட்ட ஆட்சியர் மேலே கூறியவாறு பத்தி 7–ல் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளிகளை தேர்வு செய்யும் முறையை கண்டிப்பாக கடைபிடித்து அதன் அடிப்படையில் மாவட்ட அளவில் ஊராட்சிகளுக்கான வீடுகளை ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்க வேண்டும்.

iii) கிராம ஊராட்சியானது, கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் நிரந்தர காத்திருப்புப் பட்டியலில் முன்னுரிமைப்பிரிவினரில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

**10. வேலைகளுக்கான உத்தரவு வழங்குதல்:–**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களால் நிலத்தின் சொந்த உரிமை மற்றும் இடத்தின் அளவு ஆகியவை சரிபார்க்கப்பட்டதை உறுதி செய்த பிறகு தகுதியுள்ள பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) வேலை உத்திரவினை வழங்க வேண்டும்.

**11. இடத்தை குறியீடு செய்தல்:–**

சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் ஒன்றிய மேற்பார்வையாளர்/ஒன்றிய பொறியாளர் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட வடிவமைப்புக்கேற்றவாறு வேலையைத் துவக்குவதற்காக நிலத்தில் குறியீடு செய்வார்.

**12. கட்டுமானப் பொருட்கள் விநியோகம்:–**

**சிமெண்ட்:**

மாநில அளவில், கிராம ஊராட்சிகளுக்குத் தேவையான சிமெண்ட் தங்குதடையின்றி விநியோகம் செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ‘‘அரசு சிமெண்ட்’’ (TANCEM) மூலமாக சிமெண்ட் விநியோகம் செய்து அதற்கான தொகையை மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் வழங்கப்பட்டு அத்தொகை திட்ட நிதியில் நேர்செய்யப்படும். மேலும் அரசு நிலை ஆணை எண். 188 தொழில் (MID.2) துறை, நாள் 11.12.2014–ன்படி ‘‘முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்’’ திட்டம் மற்றும் ‘‘இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்’’ ஆகியவற்றின் கீழ் வீடுகள் கட்டும் பயனாளிகள் ‘‘அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டத்தின்’’ கீழும் பயன்பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இரும்புக் கம்பி:**

இதேபோன்று, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள் அவர்களது மாவட்டங்களின் தேவைக்கேற்ப இரும்புக் கம்பிகளை கொள்முதல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அதற்கான, தொகையை மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் வழங்கப்பட்டு அத்தொகை திட்ட நிதியில் நேர்செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 300 கிலோ கிராம் இரும்பு கம்பி ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட வேண்டும்.

**கதவுகள் மற்றும் ஜன்னல்கள்:**

பயனாளிகள், கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளலாம். பயனாளிகளால் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்து வழங்கிவிட்டு அதற்கான தொகையினை திட்ட நிதியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்காணும் கொள்முதல்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர்கள் தங்கள் மாவட்டங்களுக்குத் தேவையான மொத்த அளவினைக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும்.

**13. திட்ட செயலாக்கம்:–**

i. ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட வேண்டும்.

ii. திட்ட செயலாகக்கம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

iii. வீடுகளைக் கட்டுவதற்கும், தொழில்நுட்ப வேலைகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/ஒன்றிய பொறியாளர்கள்/ஒன்றிய மேற்பார்வையாளர்கள் பொறுப்பாவார்கள். உதவி செயற்பொறியாளர்கள் வீட்டின் பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்வார்கள்.

iv. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் (ஊ.வ) வீடுகளின் பணி முன்னேற்றத்தை அடிக்கடி ஆய்வு செய்து வீடுகளை விரைந்து முடிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மாதிரி வடிவமைப்பில் மாறுபாடோ அல்லது வேறு ஏதாவது குறைபாடுகளோ இல்லை என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**14. ஆவணப்படுத்துதல்:–**

பயனாளி தற்போது தான் வசிக்கும் வீட்டின் முன்பாக நின்று புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும். இதே முறையில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும். இறுதி பணப் பட்டுவாடா செய்யும் முன்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) இந்தப் பதிவினை ஆவணப்படுத்த வேண்டும். இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1 விழுக்காடு ஆவணப்படுத்துதல் மற்றும் செய்தி, கல்வி மற்றும் தொடர்பு (Information, Education and Communication) நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**15. கண்காணித்தல்:–**

மாவட்ட ஆட்சியர் இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் பணி முன்னேற்றம் மற்றும் சூரிய சக்தி விளக்குகள் நிறுவும் பணியின் முன்னேற்றம் ஆகியவற்றை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாடு முகமை அலுவலர்களுடன் ஆய்வு செய்யவேண்டும். இத்திட்டப் பணிகளை மேற்பார்வையிட உதவி இயக்குநர் நிலையில் ஒருங்கிணைப்பு அலுவலர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆகியோர் மாவட்ட அளவில் இத்திட்டத்தை முறையாக செயல்படுத்துவதற்கு பொறுப்பாவர். சூரிய சக்தி விளக்கு அமைப்பை நிறுவுதலுக்கு மாநில அளவில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பொறுப்பாகும்.

**16. நிதி விடுவிப்பு:–**

i) பசுமை வீடுகள் திட்டத்திற்கான ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து இரண்டு அரையாண்டு தவணைகளில் நிதி பெறுவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு ரூ.1,80,000/– வீதம் மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படும். மீதத் தொகை ஒரு வீட்டிற்கு ரூ.30,000/– வீதம் சூரிய சக்தியுடன் கூடிய மின்னொளி கருவியினை வாங்குதல் மற்றும் பொருத்துதலுக்காக தலைவர்/மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு வழங்கப்படும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு நிதியை நேரடியாக விடுவிக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மூலமாக நிதி விடுவித்திடக் கூடாது.

ii) முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்திற்காக ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என்ற பெயரில் ஒரு தனி சேமிப்பு வங்கி கணக்கு தொடங்கப்பட வேண்டும். மாவட்ட "முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்" கீழ் ஒரே ஒரு வங்கி கணக்கு மட்டுமே பராமரிக்கப்பட வேண்டும்.

iii) 'முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்' செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில், ஆறாவது கணக்காக 'கிராம ஊராட்சி முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட கணக்கு' என்ற பெயரில் செயல்படுத்தப்படும். கிராம ஊராட்சி முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட கணக்கை நடைமுறை படுத்துவதற்கான வழிமுறை விவரங்கள் கீழ்க்கண்டவாறு:–

**a) வரவுகள்:** முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ்

பெறப்படும் நிதியே கிராம ஊராட்சி முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டக் கணக்கின் வரவுகள் ஆகும்.

**b) செலவுகள்:** 'கிராம ஊராட்சி முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட கணக்கில்' வரவு வைக்கப்பட்டுள்ள தொகை முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட பணிகளுக்காக செலவவிடப்படும்.

**c) கணக்குப் பராமரிப்பு முறை:** கிராம ஊராட்சி நிதிக் கணக்கினை பராமரிப்பது போலவே, மேலே குறிப்பிட்ட இத்திட்டக் கணக்கினையும் கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் இணைந்து பராமரிக்க வேண்டும். இருப்பினும், வங்கிகள் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் கணக்கிலிருந்து திட்டப்பணிகளுக்கு நிதியினை வழங்கும் முன் கிராம ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரின் கையெழுத்து காசோலையில் உள்ளதா ? என்பதையும் வட்டார வளர்ச்சி அலுவலரின் (வட்டார ஊராட்சி ) செயல்முறை ஆணைகள் இருப்பதையும் உறுதி செய்து வங்கிப் பதிவேடுகள் மற்றும் கணினியில் உரிய பதிவுகள் மேற்கொண்ட பின்னரே தொகை வழங்கப்படவேண்டும் என தொடர்புடைய வங்கிக் கிளைகளுக்கு மாவட்ட ஆட்சியர்கள் எழுத்து மூலம் அறிவுரைகள் வழங்க வேண்டும். 'வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) செயல்முறை ஆணைகள் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே தொகை வழங்கப்பட வேண்டும்' என்ற முத்திரை ஒவ்வொரு காசோலையிலும் இடப்பட்டிருக்க வேண்டும். இத்திட்டக் கணக்கிலிருந்து பணம் பெறக்கூடிய காசோலை அல்லது பணம் பெறும் படிவத்தின் மூலம் தொகை வழங்க அனுமதிக்கக் கூடாது.

**17.** தேவையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசனை செய்து, மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ககன்தீப் சிங் பேடி
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.